# கொழும்பில் உஷார் நிலையில் முப்படைகள்

(கொழும்பு)
தென்பகுதியில் தற்பொழுது எழுந்துள்ள அரசியல் நெருக்கடியைத் தொடர்ந்து, கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் முப்படையினரும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

பிரதான சந்திகள், வீதிகள் மற்றும் பொது இடங்களிலும் படையினர் தீவிர கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸ் நிலையங்களுக்கு அடிக்கடி மர்மத் தொலைபேசி

(4ம் பக்கம் பார்க்க)

பொது நூலகம் யாழ்ப்பாணம் 18/9/1991

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 | திருவள்ளுவர் ஆண்டு 2022 | புரட்டாதி 2 | இதழ் 219
யாழ்ப்பாணம் | புதன்கிழமை | 18-9-1991

## தென்பகுதி அரசியலில் சூடு பிடித்துள்ளது

(கொழும்பு)
ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணை பாராளுமன்றில் விவாதத்திற்கு விடப்படுமென சபாநாயகர் தெரிவித்ததையடுத்து தலைநகரில் அரசியல் நிலைமை பெருமளவு சூடு பிடித்துள்ளது.

எதிர்க்கட்சியினரும், ஐ.தே.

(4ம் பக்கம் பார்க்க)

## ராணுவம் குறைப்பு

(யாழ்ப்பாணம்)
கட்டைக்காடு, வெற்றிலைக்கேணிப் பகுதியில் இராணுவத்தினரின் தொகை குறைக்கப்பட்டு வருவதுடன் பல இராணுவத் தளபாடங்களும் இப்பகுதிகளிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

(4ம் பக்கம் பார்க்க)

# பாராளுமன்றத்தை கலைத்து திடீர்த் தேர்தல் நடத்துவதை எவரும் கட்டுப்படுத்த முடியாது

## ஜனாதிபதி பிரேமா மீண்டும் அறிவிப்பு

[கொழும்பு]
பாராளுமன்றத்தை கலைத்து திடீர் தேர்தல் நடத்தும் தமது அதிகாரத்தை எவராலும் கட்டுப்படுத்த முடியாது என்றும் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கும் திடீர் பொதுத்தேர்தலை நடத்துவதற்கும் தமக்கு அதிகாரம் உண்டு என்றும் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா மீண்டும் அறிவித்துள்ளார்.

சபாநாயகருக்கு எழுதியுள்ள மற்றொரு கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் இடைநிறுத்தி வைக்கப்பட்டதை அடுத்து தமக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை காலாவதியாகிவிட்டதாகவும், நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் தமக்கு இருப்பதாகவும் இதுவிடயத்தில் சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரமே தாம்

(4-ம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றம் இன்று கலைக்கப்படலாம்

(கொழும்பு)
இன்று மாலை நாடாளுமன்றம் கலைக்கப்படும் உத்தரவில் ஜனாதிபதி பிரேமதாசா கையொப்பம் இடக்கூடுமென அரசியல் வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இன்று மாலை சுபநேரம் என ஜோதிடர்கள் கணித்துள்ளதனால் சிலவேளைகளில் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைக்கக்கூடுமெனத்

(4-ம் பக்கம் பார்க்க)

## உயர்நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்படும்

(கொழும்பு)
ஜனாதிபதி பிரேமதாசா நாடாளுமன்றத்தைக் கலைத்தால் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்போவதாக ஜனாதிபதிக்கு எதிரான

(4ம் பக்கம் பார்க்க)

## குற்றவிசாரணை மனு சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல

(கொழும்பு)
ஜனாதிபதி ஆர் பிரேமதாசா மீது கொண்டு வரப்பட்ட குற்ற விசாரணை மனுகோரும் தீர்மானம், சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதல்லவென ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

1991 செப்ரம்பர் 11ம் திகதி வரை பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்திலோ அல்லது ஒழுங்

(4-ம் பக்கம் பார்க்க)

## தபால்விநியோகம்

(யாழ்ப்பாணம்)
குமாரி கப்பலில் வந்ததபால்கள் விநியோகம் இன்று நடைபெறுமென யாழ். தபால்நிலைய உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

இக்கப்பலில் வந்த தபால் பொதிகள் நேற்றுயாழ். தபால் நிலையத்துக்கு எடுத்துவரப்பட்டது. (வி)

மணலாறு மாவட்டத்தில்

## தொடர்ந்து கடும் மோதல்

### 8 இராணுவம் பலி; 30 பேர் காயம்

(யாழ்ப்பாணம்)
மணலாறு மாவட்டத்தில் உள்ள நித்திகைக்குளம் காட்டுப் பகுதியில் 3-வது வாரமாக நேற்றும் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் தொடர்ந்து கடும்மோதல்கள் நடைபெற்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

## மாவீரர் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்கு

[யாழ்ப்பாணம்]
மணலாறு காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கடும் யுத்தத்தின் போது வீரமரணமடைந்த மாவீரர்களுடைய புகழுடல்கள் வலிகாமத்தில் சுன்னாகம் சந்தை மைதானத்தில் அமைக்கப்பட்ட விசேட மேடையிலும், தென்மராட்சிப் பகுதியில் மட்டுவில் மகாவித்தியாலயத்திலும் வடமராட்சிப் பகுதியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் மக்களின் அஞ்சலிக்காக இன்று வைக்கப்பட்டு இறுதியாக மாவீரர்களின் சொந்த இடங்களிலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் புதைக்கப்படும்.

## மர்ம வாகனங்கள் கொழும்பில் நடமாட்டம்

(கொழும்பு)
கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் மர்மமான வாகனங்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

இவ்வாகனங்களின் நடமாட்டம் எதிர்க்கட்சி ஆதரவாளர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருப்பதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன் பொறளைப்பகுதியில் கவரொட்டி ஒட்டிக் கொண்டிருந்த ஒருவர் வான் ஒன்றில் வந்தவர்களினால் தாக்கப்பட்டு கத்திக் குத்துக்கிலக்கானார்.

தற்போது இவர் படுகாயங்களுடன் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (சி)

## அரசின் நடவடிக்கை அதன் பீதியை காட்டுகிறது

### -அனுரா கருத்து

(கொழும்பு)
தற்போது அரசு மேற்கொள்ளும் நடவடிக்கையெல்லாம் அதன்பீதியையும், இயலாமையையும் வெளிப்படுத்துவதாக அநுர பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

இதேவேளை சட்டமா அதிபரின் ஆலோசனை பற்றி திரு.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஒலிபரப்பு கூட்டுத்தாபன இரு அதிகாரிகள் ராஜினாமா

(கொழும்பு)
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இரு உயர் அதிகாரிகள் தமது பதவிகளை ராஜினாமா செய்துள்ளார்கள்.

சிங்கள சேவையின் இயக்குநர் திரு. பாலித பெரேராவும், ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பயிற்சி நிலைய பொறுப்பதிகாரி திரு. பேற்றி கலகிற்றியாவுமே ராஜினாமா செய்தவர்களாவர்.

இவர்களின் பதவி விலகலுக்

(4ம் பக்கம் பார்க்க)

## பிரேமாவிற்கு எதிரான மேலும் ஒரு எம். பி.

(கொழும்பு)
ஜனாதிபதிக்கு எதிரான மனுவில் கைச்சாத்திட்ட ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி.க்களில் மேலும் ஒருவர் அடையாளம்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விண்ணப்பப்படிவம்

(1) குவைத்தில்இருந்துவந்த வர்களுக்கான நிவாரணம் பெறுவதற்கான படிவம், (2 சுகாதார அமைச்சு கவனிப் பாளர் பதவிக்கு. (3) ஆசிரி யர் கலாசாலைக்கான படிவங் கள் விற்பனையாகிறது நாயக பானன் ஸ்ரோரிஸ், மானிப் பாய். (சி-5368)

### சுத்தமான வேப்பெண்ணெய்

விளக்கெரிக்க, கிருமி, பூச்சி, பீடை தொல்லையிலிருந்து விடுபட வேப்பெண்ணெய்: மில்க்வைற்தொழிலகத்திலும், யாழ்ப்பாணம், திருநெல்வேலி இணுவில் அண்ணு கோப்பி கடைகளிலும் விற்பனையா கிறது. [எ-1585]

### O/L A/L PURE/APPLIED MATHS

சாதாரணதர, உயர்தர வகுப்புக்களுக்கான தூய/பிர யோக கணிதம் தனிப்பட்ட முறையில் அல்லது வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். மானிப்பாய் மற்றும் யாழ். நகர எல்லைக்குட்பட்ட பிர தேசம் விரும்பத்தக்கது. தொடர்புகொள்க; S. செல் லத்துரை, புதுமதவடி சந்தை ஒழுங்கை, சுதுமலை வடக்கு, மானிப்பாய். (சி-5362)

### முக்கிய அறிவித்தல்

நீண்ட இடைவெளிக்குப் பின் அசல் ஆர். வி. ஜி. பீடி கள் விற்பனைக்கு வந்துள்ளது. அசல் ஆர். வி. ஜி. பீடிகள் கூடுதல் பச்சை நீலம் கலந்த வர்ண பண்டல் கட்டு லேபல் களில் வெளிவருகின்றன. அசல் ஆர். வி ஜி. பீடிகளில் 12பீடிகள்கொண்ட கட்டுக்கள் வெள்ளை லேபல்களில் வெளி வருவதில்லை. போலி பீடிகளை வேண்டி ஏமாறாமல் அசல் ஆர். வி. ஜி. பீடிகளை கேட்டு வாங்குங்கள். ஆர். வி. ஜி. நிர்வாகம், 58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பா ணம். (சி-5360)

## இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் வண்ணை வெங்கடேச வரதராஜப்பெருமாள் ஆலய இரதோற்சவம் நாளை 19-ம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் 20ம் திகதி காலை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (56)

## நோயாளர் பயணம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு வைத்தியசாலை யில் சிகிச்சை பெறுமுகமாக யாழ். போதனு வைத் தியசாலையிலிருந்து பதிவு செய் யப்பட்ட 33 நோயாளர்கள் குமண கப்பலில் பருத்தித் துறையிலிருந்து புறப்பட்டுச் சென்றனர். (56)

## மாநகரசபை வைத்தியசாலை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் மத்திய சித்த வைத்தியசாலை யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள அதன் முன்னைய கட்டி டத்தில் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

இராணுவ நடவடிக்கைகளா னுல் இடம்பெயர்ந்து இது வரைகாலமும் நல்லூர் கிளை யில் இயங்கிவந்த மேற்படி இலவச வைத்தியசாலையை கடந்த வாரம் சுகாதாரப் பிரிவு வைத்திய கலாநிதி இ தெய்வேந்திரம் திறந்துவைத் தார். [வி]

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண் ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் என்னுல் பெற்றுக்கொள்ளப்படும்.

1. ஆங்கிலத்தில் போதனுசிரியர் தரம் III

2. தற்காலிக உதவி விரிவுரையாளர்

கிறிஸ்தவ நாகரீகம்
தொழில் நிர்வாகம்
வர்த்தகம்
நாடகமும் அரங்குக் கலைகளும்
பொருளியல்
ஆங்கில இலக்கியம்
நுண்கலை
புவியியல்
இந்து நாகரீகம்
வரலாறு
மெய்யியல்
தமிழ்
அரசறிவியல்
சித்தமருத்துவம்

3. தற்காலிகப் போதனுசிரியர்

ஆங்கிலம்
கர்நாடக வாய்ப்பாட்டு
மிருதங்கம்
பரத நாட்டியம்

4. இடைவரவு விரிவுரையாளர்

கிறிஸ்தவ நாகரீகம்
கணக்காய்வும் கணக்கியலும்
வரி விதிப்பு
வர்த்தக கைத்தொழில் சட்டம்
சட்டச்சூழல்
முகாமைத்துவமும் ஒழுங்கமைப்பு நடத்தையும்
சமஸ்கிருதம்
நாடகமும் அரங்குக் கலைகளும்
மீன்பிடிப் புவியியல்
பிரான்சிய மொழி - (புவியியல் மாணவர் களுக்கு)
தமிழ்
தமிழ் (சித்த வைத்திய மாணவர்களுக்கு)

5. இடைவரவுப் போதனுசிரியர்

கர்நாடக வாய்ப்பாடு
வீணை
வயலின்
பரத நாட்டியம்

6. தற்காலிக கட்டுரை ஆசிரியர்

புவியியல் (நிலவளவை அறிவுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படும்)
வரலாறு

7. தற்காலிக செய்முறை காட்டுநர்

சித்த மருத்துவம்

ஆங்கிலத்தில் போதனு சிரியர் தரம் IIIக்கான பதவிக்கு விண்ணப்பமுடி வுத் திகதி 1991-10-25 ஆகும். ஏனைய பதவி களுக்கு முடிவுத் திகதி 1991-10-18.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதி வாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங் களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண் டும்.

தபால் மூலம் படிவங் களையும் இதர விபரங் களையும் பெற விரும்புப வர்கள் 23X10 சதமமீற் றர் அளவுடைய சுயமுக வரியிட்டுமுத்திரையொட் டப்பெற்ற தபால் உறையை அனுப்புதல் வேண்டும்: விதிக்கப் பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப் பங்கள் மாத்திரம் ஏற் றுக்கொள்ளப்படும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங் கள், நியதிச்சட்ட சபை களிலுள்ள விண்ணப்ப தாரிகள் அந்நிறுவனங் களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண் டும். ஒன்றுக்குமேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப் பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங் கள் அனுப்புதல் வேண் டும்.

ஆங்கிலத்தில் போதனு சிரியர் தரம் IIIக்கான பதவிக்குத் தெரிவு செய் யப்பட்ட அபேட்சகர் களின் சிறப்புத் தகமை களையும்/அல்லது அனுப வத்தையும் கவனத்தில் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்த மான படியில் வைக்கப் படுவர்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

(எ-1584)

## இடம்பெயர்ந்த மக்களின் விபரங்கள் பெறமுடியவில்லையாம்!

(வேலணை)

தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்து யாழ் குடாநாட் டின் பல பகுதிகளில் வாழும் அகதிகளின் சரியான விபரங் களை பெறமுடியாமல் இருப்ப தாக தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகளிலுமுள்ள கிராமசேவை அலுவலர்கள் பகுதியில் தங்கியிருக்கும் இடம் பெயர்ந்தவர்களின் உறுதிச் சீட்டுகளை அவ்வப்பகுதி கிராம சேவை அலுவலர்கள்கொடுக்க தாமதப்படுவதாலேயே இவ் வாறன பிரச்சனைகள் எழுந் துள்ளனவாம். (75)

### கிராமசேவை அலுவலருக்கு சின்னம்

(சித்தன்கேணி)

யாழ். மாவட்டத்தில் கட மையாற்றும் சகல கிராம சேவை அலுவர்களுக்கும் "கிராமசேவை அலுவலர்" என்ற வெள்ளியினலான சின் னம் வழங்கப்படவுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டு அலுவலகள் அமைச்சினுல் இச் சின்னம் அனுப்பி வைககப் பட்டது. (137)

### தியாகி திலீபனின் கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் 4-ஆம் ஆண்டு நினைவையொட்டி, விடுதலைப்புலிகள் மக்கள் முன் னணி மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவினர் ஆத ரவுடன் இன்று நடைபெறும் பொதுக்கூட்டங்களின் விபரம் வருமாறு:

இன்று மாலை 7 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மைதானத்தி லும், வேலணை துறையூர் சனசமூகநிலைய மைதானத்தி லும், வடமராட்சி கற் கோவளம் சந்தையடி மைதா னத்தில் முற்பகல் 10 மணிக் கும், வல்வெட்டித்துறை அ. மி. க. பாடசாலையில் பிற் பகல் 4 மணிக்கும், கைதடி நவீல்ட் பாடசாலையில் 7 மணிக்கும் நடைபெறும்- [வி]

### தியாகத் தீ-4

நான்காம் நாளில்
நலிந்த தேகம்...
ஊணினை மறந்து
உறங்கிய திலீபனைக்
கண்டவர் நெஞ்சில்
கரைந்தது சோகம்:

- வாஞ்சிநாதன்.

---

சகல திரைப்பட அரங்கு, வீடியோ பட அரங்கு உரிமையாளர்களையும், முகாமையாளர்களையும் நாளை 1991-09-19 (வியாழன்) காலை 10 மணிக்கு நிதர்சனம் செயலகத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் கலந்து கொள்ளு மாறு அழைக்கின்ருேம்.

குறித்த நேரத்தில் கலந்துரையாடல் ஆரம்பமாகும்.

பொறுப்பாளர்,
நிதர்சனம்,
திருநெல்வேலி. (எ-1587)

---

நயினுதீவு

## ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் விசேட அறிவித்தல்

நயினுதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் அறங் காவலர் சபையின் தலைவர் திரு. க. நாகேஸ்வரன் M. A. அவர்கள் கடந்த 05-09-91 திகதியிலிருந்து தமது தலைவர் பதவியினை இராஜினுமாசெய்துள்ளார்கள் என்பதையும், அறங்காவலர் சபையின் புதிய தலைவராகத் திரு. பொ. இராசலிங்கம் அவர்கள்கடந்த 05-09-1991 திகதியன்று நடைபெற்ற அறங்காவலர் சபைக்கூட் டத்தில் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என்பதையும் இத்தால் சகலருக்கும் அறியத்தருகின் ருேம்.

நாக. குமாரசூரியர்
கௌரவ செயலாளர்

அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்,
நயினுதீவு.
15-09-1991 (எ-1586)

---

## யாழ்ப்பாணக் கல்லூரி

வட்டுக்கோட்டை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நடாத்தும் 1991/1992 கல்வி ஆண்டிற்கான வெளிவாரிக் கலைமாணித் தகுதிகாண் (G. A. Q.) பாடநெறி

## விரிவுரைகள் ஆரம்பமாகின்றன

- க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் 3 பாடங் களில் சித்தியெய்தியவர்களும் - பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.
- விண்ணப்ப முடிவுத்திகதி 25-09-91.
- விரிவுரைகள் 1-10-91இல் ஆரம்பமாகின்றன.
- விரிவுரைகள் வாரநாட்களில் பி. ப. 3-00மணி தொடக்கம் பி. ப. 6-00 மணிவரை நடை பெறும்.
- பின்வரும் பாடங்கள் போதிக்கப்படும்:

| | |
|---|---|
| தமிழ் | அரசியல் |
| கிறிஸ்தவ நாகரீகம் | பொருளியல் |
| இந்துநாகரீகம் | ஆங்கிலம் |
| மெய்யியல் | சரித்திரம் |

- மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்.

மாணுக்கர்கள் நேர்முகப் பரீட்சையின் பின்னரே அனுமதிக்கப்படுவர்.

முதல்வர்

கல்லூரிப்பூங்கா,
வட்டுக்கோட்டை [எ-1583]

# இலங்கைத் தீவில் —

# 'இரு தேசங்களின் கதை'

## 'ஏசியா வீக்' கட்டுரையாளர் விமர்சனம்

கொழும்பில் முன்னேற்றம் என்பது இந்த நாட்களில் எங்கும் விசாலமடைந்து காணப்படுகிறது. பாலங்கள் கட்டுவதிலும், நிலத்தடியில் கேபிள் கம்பிகளை தாழ்ப்பதிலும் உள்ள முன்னேற்றங்கள் பல அபிவிருத்திகளைக் காட்டுகிறது.

'லங்கா ஒபரோய்' ஹோட்டலில் உள்ள புதிய கரோக பாரில் பாட்டுகளுக்கிடையில் இளம் தொழிலாளர் தங்களுடைய புதிய படைப்பாகிய "வொனன்ஸாஸ்களை காட்சிக்காக பொருளாதார முன்னேற்றமுள்ள சந்தைகளில் வைத்திருக்கிறார்கள்.

துறைமுகத்தில் நிசான்ஸ், ஹொண்டாஸ், பஜ்ரோஸ் போன்றவை இறக்குமதிக்காக காத்திருக்கின்றன உல்லாசப் பேருந்துகள் ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் ஓடு பாதைகளில் நிற்கின்றன. இதே வேளை இராணுவத்தினரின் வீதித் தடைகளும், முடிவில்லாத பாதுகாப்பும் கவர்ச்சிகரமான தலைநகரைத் தடை செய்கின்றன.

### அடுத்த தலைநகரில்

இலங்கையில் 'அடுத்த தலைநகரில்' அது வேறுவிதமான கதை. வடபகுதியில் 400 கி. மீ. தூரத்தில யாழ். குடாநாடு அமைந்துள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகள் நாட்டின் சிறுபான்மைத் தமிழருக்காக ஒரு தனிநாடு கோரிப் போராடுகிறார்கள்

யாழ். குடாநாட்டில் கடந்த ஒரு வருடமாக மின்சாரமே இல்லை. தொலைபேசிக் கம்பிகள் எல்லாம் அழிந்துவிட்டன. ஒரு லீற்றர் பெற்றோல் 1,250 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. சந்தைகளில் குறைந்த அளவிலேயே பலவகையான காய் கறிகளும், அரிசியும் கிடைக்கின்றன அதுவும் அதிக விலைகொடுத்து வாங்கவேண்டும்.

### அகோர ஷெல் தாக்குதல்

இராணுவத்தினரின் அகோர ஷெல் தாக்குதலை, குடியானவர்கள் தங்களுக்கு ஹெலிகொப்டர் தாக்கத்திற்கு 'இரண்டாம் உணர்வை' தோற்றுவித்திருப்பதாகக் கூறுகிறார்கள். எப்போது நிலைமை வழமைக்கு வரும் என்று கதைப்பதையும் மக்கள் நிறுத்திவிட்டார்கள் என்றார் ஒரு உதவித் தொழிலாளி.

'இது தான் தங்களுடைய புது வாழ்வு' என்பதை மக்கள் இப்போது உணர்ந்துவிட்டார்கள் இதுவே இங்கு தொடர்கிறது.

### இரண்டு தேசங்கள்

எட்டு வருடச் சிவில் யுத்தத்தின்பின், இலங்கை இரண்டு தேசங்களைக் கொண்ட ஒரு தீவாகிவிட்டதுபோல் தெரிகிறது. ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவினுடைய ஐ. தே. கட்சி அரசு செழிப்பாக வுள்ள தெற்கை ஆளலாம். ஆனால் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட (அழிக்கப்பட்ட) யாழ்ப்பாணத்தில் புலிகள் சிவில் நிர்வாகத்தைச் சீரானமுறையில் நடைமுறைப் படுத்தியுள்ளார்கள்.

இதுவரை அரசாங்கம் பேச்சுவார்த்தைபற்றி விடுத்த அழைப்புகள் எல்லாம் புலிகளின் காதில் விழவில்லைப் போலும் .தினமும் இதேநிலை காணப்படுகிறது.

இருந்தும் விடுதலைப்புலிகள் கூடுதலாகத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் பிரதேசம் அவர்களுடன் சென்றுவிட்டதாகவே கருதப்படுகிறது. ஆனையிறவு முற்றுகையை கொழும்பு முறியடித்தது ஒரு திருப்புமுனையாகுமெனச் சில அவதானிகள் கருதுகிறார்கள். இறுதியில் இராணுவம் தனது கை ஓங்கும் நிலையை ஏற்படுத்தப் பெருமளவு முயலலாம்.

இதற்கிடையில் புலிகளுக்கு அரசியல், இராணுவ ரீதியில நெருக்கடி ஒன்றைக்கொடுக்க இந்தியாவும் முனைந்து வருகிறது. ஆனையிறவுப் போர் கொழும்புக்கு வெற்றியெனப் பெருமளவு அவதானிகள் கூறுகிறார்கள். சுமார் 6,000 புலிகள் முகாமினுள் 800 படையினரைப் பொறி வைத்திருந்தார்கள்.

இதனை முறியடிக்க அரசு இராணுவம், கடற்படை' விமானப்படைகளின் பெருமளவு படையணிகளை அனுப்பியது. 24 நாட்களின் பின்பே இதனை முறியடிப்பது சாத்தியமாயிற்று. இது பற்றி ஒரு அவதானி கூறுகையில்: புலிகள் அரசைக் குறைத்து மதிப்பிட்டுவிட்டதாகத் தெரிவித்தார்.

இந்த யுத்தத்தில் ஈடுபட்ட இராணுவ கமாண்டோ அதிகாரி ஒருவர் கூறுகையில்; ஆனையிறவுப் போரில் புலிகளே வெல்லுவார்களென நாம் நினைத்தோம். தற்போது அது அவர்களால் முடியாது என்றார்.

மற்றொரு அவதானி கூறுகையில், இந்தப்போரில் புலிகளுக்கே வெற்றி என்றார். 8000 படையினரை சேற்றுச் சகதி பகுதியினுள் மாத்திரம் சுமார் இரு வாரம் போட்டடித்து திக்குமுக்காடச்செய்து விட்டார்கள் என்றார் இலங்கையில் இரு மரபுவழிப்படைகள் (இரு இராணுப்படை) இருப்பது தற்போது தெளிவாகிறது என பல அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இரு தரப்பு படைகளும் தம்மை உயர்ந்த வலுவான நிலையில் வைத்துக்கொள்ள முயற்சிப்பதாக ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு நெருங்கிய வட்டாரங்கள் கூறின. இரு தரப்பும் தற்போது பேச்சுகளுக்கு எந்தவித அவசரத்தையும் காட்டவில்லையென்றும் இரு தரப்பும் தமது பலத்தை அதிகரித்து உயர்ந்த நிலையில் இருப்பதற்கே முயற்சிக்கின்றனர் என்றும் அந்த வட்டாரங்கள் கூறின. (தொடரும்)

# கொலைக் குற்றவாளிக்கு மரண தண்டனை

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்த குற்றத்திற்காக மல்லாகத்தைச்சேர்ந்த நாகமணி கார்ட்டூபன் என்ற பொதுமகனுக்கு விடுதலைப்புலிகளினால் மரண தண்டனை வழங்கப்பட்டது.

கடந்த 15-ஆம் திகதி மல்லாகம் பகுதியில் வைத்து மேற்படி நபருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது.

# யாழ். செயலக ஊழியருக்கு கட்டுப்பாட்டு விலையில் உலர் உணவு!

(மானிப்பாய்)

யாழ். செயலக நலன்புரிச் சங்கம் செயலக ஊழியர்களுக்கு அத்தியாவசிய உலர் உணவுப் பொருட்களைக் கட்டுப்பாட்டு விலையில் நேற்று முதல் விநியோகம் செய்து வருகின்றது.

இதன் பிரகாரம் ஒரு உலர் உணவு அட்டைக்கு 3 கிலோ அரிசி. 5 கிலோ மா, 2 கிலோ பருப்பு, $\frac{1}{4}$ கிலோ தேயிலை, 1 கிலோ சீனி. 1 லக்ஸ்பிறே பைக்கற் என்பன வழங்கப்படுகின்றன. (71)

# குமுழமுனை மக்கள் இடம்பெயர்வு!

(யாழ்ப்பாணம்)

குமுழமுனைப் பகுதி மக்கள் முற்றுமுழுதாக இடம் பெயர்ந்து அகதிகளாகிவிட்டனர். விவசாயத்தை நம்பிருந்தவர்கள் விவசாயங்களை மேற்கொள்ளமுடியாத நிலையில் கால்நடைகளை இழந்தும் சொத்துக்களையிழந்தும் வெளியேறிவிட்டனர்.

தொடர்ந்தும் அப்பகுதியில் கடும் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள், ஷெல் தாக்குதல் இடம்பெற்றுவருகிறது.

மன விவசாயிகள் சேர்த்து வைத்திருந்த தானியப் பொருள்களான நெல், உழுந்து பயறு சோயா, நிலக்கடலை போன்றனவற்றையும் விட்டுச் சென்றுள்ளனர். (56)

## 7000 விவசாய குடும்பங்களுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

ஏழாயிரம் விவசாயிகளுக்கு உதவிபுரிவதற்கு 'கெயார்' ஸ்தாபனம் தற்போது முன்வந்துள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள 15 ஆயிரம் குடும்பங்களுக்கு உதவிசெய்வதற்கு "கெயர்" ஸ்தாபனம் முன்னர் சம்மதம் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இதன் அடிப்படையிலேயே முதல் கட்டமாக ஏழாயிரம் விவசாயக் குடும்பங்களுக்கு நெல், மரவெள்ளிக் கிழங்கு, மிளகாய் குரக்கன் போன்ற உணவுப் பயிர்களை உற்பத்தி செய்வதற்கு சகல வசதிகளையும் இலவசமாக செய்து கொடுப்பதற்கு 'கெயர்' ஸ்தாபனம் முன்வந்துள்ளது.

ஏழாயிரம் விவசாயக் குடும்பங்களை தெரிவுசெய்து தமக்கு அனுப்பும்படி மேற்படி ஸ்தாபனம், யாழ். அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகரிடம் கடிதமூலம் கேட்டுள்ளது.

# இராசி பலன்

**18 - 09 - 1991**
**புதன்கிழமை**
**தமிழுக்கு புரட்டாதி 2**

தசமி மு. இ. 10-19 வரை, பூராடம் பி. ப. 1-25 வரை, இராகுகாலம் நண்பகல் 12-03 முதல் 1-33 வரை, சுபநேரம் மாலை 4-33 முதல் 6-03வரை அமிர்தயோகம்.

மேடம்: லட்சுமி கடாச்சம், சுபசோபன நிகழ்வு, பிறர் உதவி.

இடபம்: பகைவர்சதிச்செயல் மனக்குளப்பம், மனைவியால் துயர்.

மிதுனம்: வருமானம் அதிகரிப்பு, வீணான அலைச்சல், சகோதரர் உதவி.

கடகம்: பணப் புழக்கம், துறவு நெறி, குடும்ப சந்தோசம்.

சிங்கம்: உறவினர் விரோதம், மனக்கவலை, தொழில் நஷ்டம்

கன்னி: நெஞ்சுவலி, புத்தி தடுமாற்றம், அலைஞ்சல்.

துலாம்: நித்திரைச் சுகம், ஐஸ்வரியம், தொழில் முதலீடு

விருச்சிகம்: வீண்பழிச்சொல், வாக்குவாதை காரியத்தடை.

தனுசு: தனவிரயம், வியாபார மேன்மை, குடும்ப மகிழ்ச்சி.

மகரம்: காரிய இடையூறு, வாயுத்தொல்லை, நம்பிக்கையின்மை.

கும்பம்: பெரியோர் ஆசி, பொருள்வரவு, பயணங்களால் நன்மை.

மீனம்; அதிகாரச் சிறப்பு, உற்சாகம், எதிர்பாரா நன்மை.

ஜோஸ்யர்

# வல்வையில் இளம் பெண் மர்மமரணம்; குடும்பஸ்தர் கைது

(வடமராட்சி)

வல்வையில் இளம் பெண் ஒருவர் மர்மமான முறையில் மரணமானதை தொடர்ந்து சந்தேகத்தின் பேரில் குடும்பஸ்தர் ஒருவர் புலிகளால் கைதுசெய்து விசாரணைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

வல்வை நெடிய காட்டுப் பிரதேசத்தைச் சேர்ந்த கலா என்னும் இளம்பெண் ஒருவர் வல்வை தீருவில் பகுதியில் தனிமையில் வசித்து வந்தார். கடந்த 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வீட்டு முற்றத்தில் படுக்கை விரிப்பில் மர்மமான முறையில் இறந்து இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டார்.

இதன் காரணமாக வல்வைப் பிரதேசத்தைச்சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் புலிகளால் கைது செய்து கொண்டு செல்லப்பட்டார் விசாரணை தொடர்கின்றது. (57)

# வீர வேங்கைகளுக்கு மக்கள் அஞ்சலி

(நாவற்குழி)

மணலாறில் சிறிலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற நேரடி மோதலின் போது வீரமரணத்தை தழுவிக்கொண்ட வீரவேங்கை அக்கினோ (இராசரத்தினம் கலைவாணி, கைதடி. நுணுவில்), மதுரா (பரமு வடிவாம்பாள், மீசாலை) ஆகியோரது புகழுடல்கள் மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அஞ்சலிக்கூட்டமும் இடம்பெற்றது.

மேற்படி வித்தியாசாலை அதிபர் செ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ் அஞ்சலிக் கூட்டத்தில் தென்மராட்சி மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி சங்கரி சாவகச்சேரி வட்டப்பொறுப்பாளர் திரு. ம. ஜெயா. யாழ். மாவட்ட மக்கள் உறவுக் கொள்கை முன்னெடுப்பு பிரிவு பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் ஆகியோர் உரைநிகழ்த்தினார்கள்.

தொடர்ந்து இந்த மாவீரர்களின் புகழுடல்கள் பாண்ட் வாத்திய சகிதம் புலிகளின் இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் கொடிகாமம் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டது.

# தியாகி திலீபன் நினைவுநாள் நிகழ்ச்சிகள்

(சித்தன்கேணி)

சித்தன்கேணி. வட்டுக்கோட்டை, சங்கானை ஆகிய இடங்களில் தியாகி திலீபனின் பெரியளவிலான உருவப்படம் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்படுகின்றது

சித்தன்கேணிச் சந்தி, சங்கானை சந்தை ஆகிய இடங்களிலும் வட்டுக்கோட்டை, கலைநகர் நேருஜி கி. மு. ச. நிலைய மூன்றல் ஆகிய இடங்களில் தியாகி திலீபனின் பெரியளவிலான உருவப்படம் அலங்கரிக்கப்பட்டமேடைமீது வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப் படுகின்றது. (137)

### உண்ணாவிரதம்

(பண்டத்தரிப்பு)

சில்லாலை வடக்கு சிற்றாரவையின் ஆதரவில் தியாகி திலீபனின் 4வது நினைவை முன்னிட்டு உண்ணாவிரதம் இன்று 18ம் திகதி புதன் கிழமை சில்லாலையில் நடைபெறவுள்ளது.

### வீதி திருத்தம்

(புங்குடுதீவு)

திலீபனின் நினைவாக புங்குடுதீவு பகுதியிலுள்ள குண்டும குழியுமாக இருக்கும் வீதிகள் திருத்தி அமைக்கப்படவிருக்கிறது

திலீபன் நினைவாக நடைபெறவுள்ள பொதுக்கூட்டங்கள் புங்குடுதீவின் சகல பகுதிகளிலும் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 101)

### ஆனைக்கோட்டையில்

(மானிப்பாய்)

தியாகி திலீபனின் 4 வது ஆண்டு தினத்தை நினைவுகூருமுகமாக ஆனைக்கோட்டை மானிப்பாய் பகுதி எங்கும் வாழை தோரணங்களினாலும் மஞ்சள், சிவப்பு நிறக் கொடிகளினாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது

இப்பகுதிகளிலுள்ள முக்கிய சந்திகள், சனசமூக நிலையங்கள் மற்றும் பொதுஸ்தானங்கள், ஆகியவற்றில் அமைக்கப்பட்ட அழகிய பந்தலில் திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டு மலர் மாலைகள் அணிந்து மங்கல விளக்கேற்றிய புரட்சிப் பாடல்கள் ஒலிபரப்புவதையும் காணக்கூடியதாக உள்ளது. [71]

# கலை, பண்பாட்டு கழக 3 நாள் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத் தலைமைச் செயலகத்தில் இன்றும், நாளையும், நாளை மறுதினமும் மூன்று நாட்கள் கலந்துரையாடல்கள் நடைபெறுகின்றன.

கோண்டாவிலில் உள்ள கழகக் கேட்போர் கூடத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு தமிழீழ நாடகக் கல்லூரி அமைப்பது பற்றியும், நாளை வியாழன் பிற்பகல் 3-00 மணிக்கு தமிழீழ ஓவியச் சிற்பக் கல்லூரி உருவாக்குதல் பற்றியும், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு தனித்தமிழை வழக்கத்திற்குக் கொண்டுவருதல் பற்றியும் கலந்துரையாடல்கள் நடைபெறும்.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறும் இக்கலந்துரையாடல்களில் அவ்வத்துறை சார்ந்த அறிஞர்களையும், ஆற்றலர்களையும் தவருது கலந்துகொண்டு பயன்பெறு கருத்துக்களைத் தருமாறு அழைக்கப்படுகின்றனர்.

# அழைப்பு

(யாழ்ப்பாணம்)

சகல திரைப்பட அரங்கு, வீடியோ பட அரங்கு உரிமையாளர்களையும், முகாமையாளர்களையும் நாளை 19-ம் திகதி வியாழன் காலை 10 மணிக்கு நிதர்சனம் செயலகத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகிருர்கள்.

# திலீபன் நினைவுதின காவடி ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் 4-வது ஆண்டு நினைவுதினத்தையொட்டியும், மணலாறு போரில் போராளிகளுக்கு வெற்றி வேண்டியும், நல்லூரில் நடைபெறவுள்ள உண்ணாவிரதம் நலமுடன் நிறைவுற வேண்டியும் காரைநகரைச் சேர்ந்த 9 சிறுவர்களும், ஒரு இளைஞரும் காவடி ஊர்வலம் ஒன்றை நாளை வியாழக்கிழமை நடாத்தவுள்ளனர்

திரு. ந. தர்மராசா (எம். ஜி. ஆர்.) தலைமையில் வண்ணை சிவன் கோவிலில் நாளை காலை 7-00 மணிக்கு ஆரம்பமாகும் காவடி ஊர்வலம் கே. கே. எஸ் வீதி, ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி, நாவலர் வீதி ஊடாக பெருமாள் கோயிலைச் சென்றடையும்.

காவடியுடன் விசேட மேளக் கச்சேரியும் இடம்பெறும்.

# குண்டு வெடிப்பினல் 11 பொதுமக்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா ஓமந்தைப் பகுதியிலுள்ள மாணிக்கர் வளவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பதினொரு பொது மக்கள் காயமடைந்தனர்.

காயமடைந்தோர் விபரம்: சண்முகம் பேரின்பம் (40 வயது, பருத்தித்துறை) கலியுகவரதன் (20 வயது, பருத்தித்துறை), ரவீந்திரன் [30 வயது, பருத்தித்துறை) சின்னத்தம்பி அமிர்தலிங்கம் (16 வயது தொண்டமனுறு) சின்னராசா செல்வலட்சுமி (38 வயது, பண்டத்தரிப்பு) சண்முகலிங்கம் 47 வயது மயிலங்காடு) மகாலிங்கம் ரேசம்மா [38 வயது வவுனியா) நடராசா (30 வயது சுன்னுகம்], கதிரமலை (நல்லூர்) ஆறுமுகம் ராஜேஸ்வரி (31 வயது வவுனியா) உட்பட மேலும் ஒருவர் காயமடைந்தார்

இக்குண்டு பின்னப்பட்ட வயர் பாக்கொன்றில் பொது மக்களை நோக்கி இலக்கு வைக்கப்பட்டிருந்தது.

# பொதுச்சொத்தை சூறையாடியவரை மக்கள் இனங்காண்பர் — ஜனதிபதி

(கொழும்பு)

சமாதானத்தின் போர்வையில் சம்பாதித்தவர்களை மக்கள் விரைவில் இனங்கண்டுகொள்வார்களென ஜனதிபதி பிரேமதாசா கூறியுள்ளார்.

யாப்பகுவாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார் அங்குஅவர் மேலும் பேசுகையில்;

சமாதானத்தை ஏற்படுத்துகிறோம் என்ற போர்வையில் அரசாங்க திட்டமொன்றுக்கு 100 ஏக்கர் காணியை வழங்கி அதற்கு போதியளவு நஷ்டஈட்டைப் பெற்றுக்கொண்ட பின்னர் சம்பந்தப்பட்ட திட்டத்திற்கு குறிப்பிட்ட காணி தகுதியற்றது என அதிகாரிகள் தெரிவித்ததும் நஷ்டஈட்டைத் திருப்பிக் கொடுக்காமலேயே அந்தக் காணிகளை தமது பெயருக்கு மாற்றிக்கொண்டவர்கள் பற்றி மக்கள் விரைவில் அறிந்துகொள்வார்கள் என்றும் தெரிவித்தார். (சி)

# வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு தீர்வுகாண அனைவரும் ஒன்றுசேர வேண்டும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு தீர்வொன்றைக் காண்பதற்கு நாட்டிலுள்ள அனைத்து தரப்பினரும் ஒன்றுசேர வேண்டும்.

இவ்வாறு பொலநறுவை மாவட்ட திம்புலாகலபௌத்த மஹா விகாரை பிரதம பிக்கு சிலானந்ததேரோ அனைவரையும் கேட்டுள்ளார். இப்பிரச்னைக்குதீர்வுகாண்பது அனைத்து தரப்பினதும் தேசிய கடமை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பிக்கு ஜனதிபதி பிரேமதாசாவின் நெருங்கிய ஆதரவாளர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (123)

# வீரவணக்கம்

(யாழ்ப்பாணம்)

மணலாறு மாவட்டத்தில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினருடனன மோதலில் 17ந் திகதியன்று வீர மரணத்தைத் தழுவிக் கொண்ட லோரன்ஸ் (முருகேசு தஜேந்திரன்) மாவடி, புத்தூர் மேற்கு. புத்தூர் மற்றும் 15ந் திகதி மணலாறு மாவட்டத்தில் நடைபெற்ற மோதலில் காயமடைந்து, சிகிச்சை பெற்றுவந்த சுரேன் (சந்திரசேகரம் ஜெயக்குமார்) சுன்னுகம் நேற்று வீர மரணம் அடைந்தார். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (க)

## பிரேமாவிற்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்டுள்ளதாகக் கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரான திரு. அத்துல ஆட்டிகல என்பவரே இவர் எனவும் அச் செய்திகள் கூறுகின்றன.

நுவரெலியா நுகேகொடையில் நடைபெற்ற லலித், காமினியின் கூட்டத்தில் இவரும் சமுகமளித்திருந்தது குறிப்பிடத் தக்கது (சி)

## உயர்நீதிமன்றில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தமக்கு எதிரான பதவிநீக்கப்பிரேரணைக்கு அஞ்சி நாடாளுமன்றத்தைக் கலைக்க ஜனதிபதி பிரேமதாசா முயற்சித்து வருவது அவர் எவ்வளவு விரக்தியடைந்திருக்கிருர் என்பதனைக்காட்டுவதாக உள்ளது என்று திரு. லலித் அத்துலத்முதலி செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்துள்ளார்

## கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் கிடைக்கும் தகவல்களை அடுத்து முப்படையினரும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

எந்தவொரு நெருக்கடியையும் சமாளிக்கும் விதத்தில் முப்படைகளின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

## அரசின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அத்துலத்முதலி தெரிவிக்கையில் உலகில் ஜனதிபதிக்கு எதிராக பாராளுமன்றில் குற்றப் பிரேரணை கொண்டுவரப்படும் தருணத்தில் ஜனதிபதி குற்றவாளியாகிருர். அவ்வேளை குற்றவாளியாகும் அரசுத்தரப்பினருக்கு வாதாடும் சட்டத்தரணியாக செயற்படுவதே சட்டமா அதிபரின் கடமையாகிறது என்றுர்.

# தமிழக கடற்பகுதியில் படைகள் தீவிர நடவடிக்கை

(சென்னை)

தமிழக கரையோரங்களிலும் கடற்பகுதியிலும் இந்திய கடற்படையும், மாநில பொலிஸாரும் தமது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

சுமார் 2000 பொலிஸார் இதற்கான கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கடற்படையினருக்கு தேவையான நவீன கப்பல்களும் தருவிக்கப்பட்டுள்ளது.

இரவு பகல் எந்நேரமும் தமிழகத்தின் சகல பகுதியிலும் பொலிஸார் ரோந்து சுற்றி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## பாராளுமன்றத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடப்பதாகவும் ஜனதிபதி திரு. ஆர். பிரேமதாஸா சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மதுவுக்கு அறிவித்திருக்கிருர்.

குற்றவிசாரணைப் பிரேரணையை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவர தாம் அனுமதி வழங்கியிருப்பதாகவும், ஜனதிபதி நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்துக்கு தாம் தடைவிதித்திருப்பதாகவும் அறிவித்து கடந்த சனிக்கிழமை சபாநாயகர் ஜனதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே ஜனதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (153)

## தென்பகுதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கவிலிருந்து விலக்கப்பட்டவர்களும் அடுத்த நடவடிக்கை குறித்து நேற்றுக்காலை அவசர சந்திப்பொன்றை நடாத்தினர்கள்.

இதேவேளை ஐ. தே. கவின் பாராளுமன்றக் குழுக்கூட்டம் இன்று கூடுகிறது. இன்றைய தினம் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## மணலாறு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மோதல்களின்போது படையினருக்கு பலத்த இழப்புக்கள் ஏற்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

முன்னேற முயலும் இராணுவத்தை விடுதலைப்புலிகள் அண்மையில் வைத்தே அதிரடித் தாக்குதல்களை நடாத்தி வருவதாகவும் தெரிகிறது. காட்டுப்பகுதிக்குள் அகோர ஷெல் தாக்குதல்களும், விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்களும் என்றுமில்லாதவாறு இடம்பெற்று வருகிறது. இதனல் காடுகள் தொடர்ந்தும் தீப்பற்றி எரிந்து வருகிறது.

முல்லைமாவட்ட, மணலாறு மாவட்டத்தில் குடிமனைகளை நோக்கி மூர்க்கத்தனமான குண்டுவீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன

நேற்று நடைபெற்ற தாக்குதல்களில் படையினர் தரப்பில் 8 பேர் கொல்லப்பட்டதாகவும், 30 பேர் காயமடைந்ததாகவும் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (56)

## ஒலிபரப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கான காரணம் என்ன என்பது பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (சி)

## ராணுவம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பகுதியில் தொடர்ந்து தமது நிலைகளை பாதுகாப்பாக வைத்திருக்க முடியாத நிலையிலேயே படைக்குறைப்பு நடைபெற்று வருவதாகவும் விரைவில் இங்குள்ள முகாம்கள் மூடப்படலாமென்றும் தெரிய வருகிறது. (56)

## நாடாளுமன்றம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரியவருகிறது.

இதேவேளையில் ஜனதிபதிக்கு எதிராகச் செயல்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர் மீண்டும் ஐக்கிய தேசியக்கட்சிசார்பில் போட்டியிடக் கட்சி இடம்தாராது என்பதால் நாடாளுமன்றக் கலைப்பையிட்டு இப்பொழுதே அச்சமடைய ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## குற்றவிசாரணை மனு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குப் பத்திரத்திலோ அத்தீர்மானம் பற்றி ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை.

எனவே பாராளுமன்றத்தை ஒத்திவைத்த உடனேயே அது காலாவதியாகும் என்ற அபிப்பிராயத்தை சட்டமா அதிபர் கொண்டிருந்தார்.

ஜனதிபதியைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானம்சபாநாயகரால் முறைப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது குறித்துச் சட்டமா அதிபரின் ஆலோசனை பெற அங்கு அனுப்பப்பட்டது.

அரசியல் யாப்பின் குறிப்புரையின்படி ஏற்றுக்கொள்ளுதல் என்னும் பதம் உறுதியாக அறிவிக்கக்கூடிய நேரத்திலும், திகதி ஒன்றிலும் வெளிப்படையாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை ஒன்றைக் குறிக்குமேயன்றி சபாநாயகரின் மனதில் உருவான அபிப்பிராயத்தைக் குறிப்பதாக அமையாது. மேலும் சட்டமா அதிபர் ஜனதிபதிக்கு ஆலோசனை வழங்கினரேயன்றி சபாநாயகருக்கு அந்த ஆலோசனையை வழங்கவில்லை. இது கவனிக்கப்படவேண்டிய ஒன்ருகும்

# மரண அறிவித்தல்

## திருமதி புஸ்பதேவி கணேசரத்தினம்

திருமதி புஸ்பதேவி கணேசரத்தினம் 16-9-91 திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார். அன்னர் ஓய்வுபெற்ற இந்துக்கல்லூரி ஆங்கில ஆசிரியர் கணேசரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் டாக்டர் குகதாசன் (இங்கிலாந்து), கமலநாதன் (ஜெர்மனி], சிறிஸ்கந்தன் உயர்பொறியியலாளர் (இங்கிலாந்து) டாக்டர் திருமதி சரோஜா இராசரத்தினம் [இங்கிலாந்து]- Bio-Chemistry பட்டதாரி செல்வி மகேஸ்வரி (இங்கிலாந்து] டாக்டர் சோமசுந்தரம் [இங்கிலாந்து] விவசாய விசேட பட்டதாரி இராமநாதன் [ரொறன்ரோ - கனடா], ஆகியோரின் அருமைத் தாயாரும் திருமதி ஜயந்தி, திருமதி வசந்தகுமாரி, திருமதி ரஞ்சினி திரு. இராசரத்தினம், திருமதிவரதகௌரி, ஆகியோரின் அருமை மாமியாரும், டாக்டர் சோமசுந்தரம் [கொழும்பு] திருமதி சற்குணம்பிகை (இங்கிலாந்து], சுந்தரலிங்கம் B. A, திருமதி கமலாதேவி தர்மரத்தினம், காலஞ்சென்ற இந்திராதேவி, நாகராசா, ஆகியோரின் அன்புச்சகோதரியும், சோ. அருணசலம் [ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர்] திருமதி புனிதவதி விஜயரத்தினம், திருமதி திலகவதி கதிர்காமசேகரம், திரு. திருஞானசம்பந்தமூர்த்தி ஆசிரியர் (குறுந்தலாவை] ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவர். அன்னருடைய பூதவுடல் 17-09-91 செவ்வாய்க்கிழமைபிற்பகல் 2 மணியளவில் அளவெட்டி தெற்கு மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றுர், உறவினர் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சோ. கணேசரத்தினம்
[காலஞ் சென்றவரின் கணவன்]

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி. [சி- 5366)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு செப்ரெம்பர் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Regestered as a News Paper at the General Postoffice Sri Lanka under Licence Number B/10336/81.